Freedom from Torture
Medical Foundation for the Care of Victims of Torture

111 Isledon Road London N7 7JW
t 020 7697 7777 f 020 7697 7799
w freedomfromtorture.org
facebook.com/freedomfromtorture
twitter.com/freefromtorture

**கறைபடிந்த அமைதி: மே 2009-இல் இருந்து இலங்கையில் சித்திரவதை – சாராம்சம் தமிழில்**

புனர்வாழ்வுக்கான எங்களுடைய முழுமையான அணுகுமுறையின் ஒரு பகுதியாக, நாங்கள் ஆவணப்படுத்தியுள்ள சித்திரவதைக்கான சான்றுகளைப் பகுப்பாய்வு செய்வதன் மூலமும் பகிர்ந்துகொள்வதன் மூலமும் சித்திரவதையிலிருந்து தப்பிப் பிழைத்தவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் Freedom from Torture முயற்சி செய்கின்றது. குறிப்பாக, எங்களது மருத்துவ-சட்ட அறிக்கைகளில் (Medico-Legal Report Service) ("MLRs" எனப்படுகின்றது) குறிப்பிடப்பட்டுள்ள தடயவியல் ஆதாரங்களைப் பயன்படுத்தி சித்திரவதையைத் தடுப்பதற்கும் குற்றம் புரிந்தவர்களைப் பொறுப்பேற்க வைப்பதற்கும் சர்வதேச முயற்சிகளுக்கு உதவி செய்வதென நாங்கள் முடிவு செய்துள்ளோம்.

ஆகஸ்டு 2015-இல், *கறைபடிந்த அமைதி - மே 2009-இல் இருந்து இலங்கையில் சித்திரவதை* என்ற ஒரு புதிய அறிக்கையை நாங்கள் வெளியிட்டோம். இந்த அறிக்கை இலங்கையில் உள்ள இராணுவம், காவல்துறை மற்றும் உளவுத்துறை ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதை பற்றியதாகும். இந்த அறிக்கை சித்திரவதை மற்றும் இதர கொடூரங்கள், மனிதத் தன்மையற்ற அல்லது இழிவுபடுத்தும் நடவடிக்கை அல்லது தண்டனைகளின் பயனுள்ள விசாரணை மற்றும் ஆவணப்படுத்துதல் குறித்த ஐ.நா. (UN) கையேட்டில் ('இஸ்தான்புல் நெறிமுறை' எனப்படுவது) விவரிக்கப்பட்டுள்ள தரநிலைகளுக்கிணங்க எங்களது Medico-Legal Report Service (மருத்துவ-சட்ட அறிக்கைச் சேவை)-இல் உள்ள நிபுணத்துவமிக்க மருத்துவர்கள் மூலம் தடயவியல் ரீதியாக ஆவணப்படுத்தப்பட்டுள்ள 148 இலங்கைச் சித்திரவதை வழக்குகள் குறித்து Freedom from Torture (சித்திரவதையிலிருந்து விடுதலை)-ஆல் நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் அமைந்தது ஆகும்.

இந்த ஆராய்ச்சியானது தங்களுடைய மருத்துவ-சட்டப் பதிவேடுகள் ஆராய்ச்சிக்காக பயன்படுத்தப்படலாம் என ஒப்புக்கொண்ட வாடிக்கையாளர்களாலும், இலங்கையில் சித்திரவதை மற்றும் தடுப்புக்காவலின் அனுபவங்கள் குறித்த உற்றுநோக்கல்களை வழங்குவதற்கு Survivors Speak OUT நெட்வொர்க்குடன் இணைந்து பணிபுரிந்த மற்ற வாடிக்கையாளர்களாலும் சாத்தியமாகியுள்ளது.

**முழுமையான மற்றும் சாராம்சப் பதிப்புகளும், அதோடு பல்லூடக உள்ளடக்கம் மற்றும் தப்பிப் பிழைத்தவர் கதைகளும், வேறு பலவும் எங்களுடைய**
**interactive web hub (தகவல் பரிமாற்ற இணையதள மையம்) வாயிலாக ஆங்கிலத்தில் கிடைக்கின்றன.**

மே 2009-இல் இலங்கைக் குடிமைப் போர் முடிந்தது முதல் போடப்பட்ட 148 வழக்குகளுமே சித்திரவதை இழைத்த குற்றத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும், ஆனால் மிகச் சமீபத்திய வழக்குகளில், 2014-இலிருந்தும் மற்றும் 2015-இலிருந்தும் கூட, Freedom from Torture (சித்திரவதையிலிருந்து விடுதலை)-க்கு பரிந்துரைக்கப்படுகின்றன. 2014-இல், தொடர்ச்சியாக மூன்றாவது வருடமாக, மருத்துவச் சேவைகளுக்காக Freedom from Torture (சித்திரவதையிலிருந்து விடுதலை)-க்கு பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு முதலாவது வம்சாவளி நாடாக இலங்கை திகழ்ந்தது.

சண்டை நின்ற பிறகும் கூட சித்திரவதை முடிவுக்கு வரவில்லை என்பதை எங்களது ஆராய்ச்சி நிரூபித்துக் காட்டுகின்றது. மாறாக, சித்திரவதை - கற்பழிப்பு மற்றும் பாலியல் சித்திரவதையின் இதர வடிவங்கள், அதிகப்படியான எரிப்பு மற்றும் உடல் ரீதியான தாக்குதல் ஆகியவை உட்பட – இலங்கையில் இயந்திரங்களின் அடக்குமுறையில் ஒருங்கிணைந்ததாக உள்ளது மற்றும் அது தண்டனை விலக்கீட்டுரிமையுடன் தொடர்ந்து குற்றம் புரிந்து வருகின்றது. பாதிக்கப்பட்டவர்களின் உடலில் உள்ள கடுமையான வடுக்கள் குறித்து எந்த ஒரு முறையான நடவடிக்கையும் எடுக்கப்படாததன் காரணமாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ள விளைவுகளின் அச்சமில்லாமல் குற்றம் புரிபவர்கள் சித்திரவதை செய்து வருவதாகத் தெரிகின்றது. குறிப்பாக, தற்பொழுதோ அல்லது முன்னரோ தமிழீழ விடுதலைப் புலிகளுடன் (LTTE) ஏதாவது ஒரு நிலையில் உண்மையான அல்லது உணர்வுப்பூர்வ தொடர்பு கொண்டுள்ள தமிழர்கள் தொடர்ந்து சித்திரவதைக்கு ஆட்படுகிறார்கள்.

இந்த ஆய்வில் யாருடைய வழக்குகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளனவோ அந்த உயிர்பிழைத்தவர்கள் மீது அழிவுகரமான தாக்கத்தை சித்திரவதை ஏற்படுத்தியுள்ளது: 148 வழக்குகளிலுமே குறிப்பிடத்தக்க உளவியல் ரீதியான தாக்கத்துக்கான சான்று கண்டறியப்பட்டுள்ளது, தப்பிப் பிழைத்தவர்களில் பெரும்பாலானோர் PTSD (தாக்குதலுக்குப் பிந்தைய அழுத்தக் கோளாறு) மற்றும் மன அழுத்தம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டதும் இதிலடங்கும்.

இந்த ஆய்வில் மதிப்பாய்வு செய்யப்பட்ட வழக்குகளில் மூன்றில் ஒரு பங்குக்கும் மேற்பட்டவர்கள் ஆயுத மோதலின் முடிவைத் தொடர்ந்து UK-இலிருந்து திரும்பி வந்த பிறகு இலங்கையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர் அல்லது சித்திரவதை செய்யப்பட்டனர் என்பது Freedom from Torture (சித்திரவதையிலிருந்து விடுதலை)-க்கு குறிப்பாக கவலையளிப்பதாக இருக்கின்றது. (148-இல் 55 வழக்குகள் அல்லது 37%).

பல வருடங்களாக நாங்கள் அடுத்தடுத்த அரசியல் தலைவர்களின் கீழ் சித்திரவதை செய்யப்பட்ட இலங்கையினருடன் பணிபுரிந்து வந்துள்ளோம். சித்திரவதை என்பது இலங்கையில் அரசு இயந்திரத்தின் ஆழமான ஒரு பகுதியாக உள்ளது என்பதை இந்த அனுபவத்தின் மூலம் நாம் தெரிந்துகொள்கிறோம். இலங்கையில் சித்திரவதையைப் பூண்டோடு ஒழித்துக்கட்ட வேண்டுமெனில் சொந்த நலன்களுக்கான சவால்கள் உட்பட, ஒரு அடிப்படையான மாற்றம் தேவை, ஆனால் ஜனவரி 2015-இல் ஏற்பட்ட ஜனாதிபதி மாற்றம் போன்ற அரசியல் முன்னேற்றங்கள் இருந்த போதிலும் இந்த நாட்டில் மாற்றம் இன்னும் சாத்தியமில்லாததாகவே இருக்கின்றது.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முழுமையான பரிந்துரைகள் இந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளன, அதோடு இவை பற்றிய விவாதமும் Freedom from Torture (சித்திரவதையிலிருந்து விடுதலை)-யின் உதவியுடன் இலங்கையில் சித்திரவதையிலிருந்து தப்பிப் பிழைத்தவர்களுடன் Survivors Speak OUT–ஆல் மேற்கொள்ளப்படுகின்றது. அவை குறித்த, நமது மிக முக்கியமான பரிந்துரைகள் பின்வருமாறு:

ஐ.நா. மனித உரிமைக் கழகம் மற்றும் பாதுகாப்பு மன்றத்தின் உறுப்பு நாடுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உயர்தரமான சர்வதேச தரமுடைய வெளிப்படைத்தன்மை, தன்னாட்சி மற்றும் அணுகல்தன்மை ஆகியவற்றைப் பூர்த்தி செய்யக்கூடிய உண்மையான பொறுப்புடைமைச் செயல்முறையை உடனடியாக உறுதி செய்ய வேண்டும். இந்தச் செயல்முறை ஆயுதப் போராளிகள் மற்றும் இலங்கை அரசு ஆகிய இரண்டு தரப்பினரும் போர் முடிந்ததற்குப் பிந்தைய 'அமைதி' வருடங்களில் சித்திரவதை, இதர தீவிரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் தொடர்புடைய சர்வதேசக் குற்றங்கள் ஆகியவற்றை மேற்கொண்டனரா என்பதை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

சித்திரவதை புரிந்தவர்களாக குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களை பணியிடை நீக்கம் செய்தல், குற்றவியல் விசாரணையைத் தொடங்குதல் மற்றும் அரசியல், இராணுவ மற்றும் பாதுகாப்புத் துறைகளுக்குள் அவர்களுடைய அதிகாரம் மற்றும் பணிமூப்பைப் பொருட்படுத்தாமல் தொடர்புடையவர்கள் மீது வழக்குத் தொடுத்தல் ஆகியவற்றின் வாயிலாக இலங்கை அரசு சித்திரவதைக்கு எதிரான 'சகிப்புத்தன்மையற்ற' கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

பாலியல் சித்திரவதைக்கான தண்டனை விலக்கைக் கையாளுவதிலும், பாலியல் சித்திரவதையில் தப்பிப் பிழைத்தவர்களை வல்லுநர்களின் பரிசோதனைக்கு உட்படுத்துவது ஆகியவற்றுக்கான முயற்சிகளில் போரின் போதான பாலியல் சித்திரவதைகளின் ஆவணப்படுத்துதல் மற்றும் விசாரணை குறித்த சர்வதேச நெறிமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் பாலியல் வன்முறை முயற்சியைத் தடுப்பதில் இலங்கை அரசு தீவிரமாகச் செயல்பட வேண்டும்.

இலங்கை அரசு சித்திரவதைக்கு எதிரான மாநாட்டுக்கான விருப்ப நெறிமுறையை உறுதி செய்ய வேண்டும் எனவும், இராணுவம், காவல்துறை மற்றும் புலனாய்வுச் சேவைகளுக்குள் விரிவான பயிற்சியளிப்பது உட்பட பயனுள்ள சித்திரவதைத் தடுப்புத் திட்டத்தை உருவாக்க வேண்டும் எனவும், சுதந்திரமான தேசிய மற்றும் சர்வதேச கண்காணிப்பாளர்களை அதிகாரப்பூர்வமற்ற தடுப்புக்காவல் வசதியிடங்கள் உள்ளிட்ட எந்த ஒரு தடுப்புக்காவல் மையத்தையும் முறையான முன்னறிவிப்பற்ற ஆய்வுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்படுகின்றது.

இந்த அறிக்கையில் இடம் பெற்றுள்ள ஆதாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் இலங்கையுடனான தனது புகலிடக் கொள்கையைப் புதுப்பிப்பதன் மூலம் தனிநபர்கள் UK-இலிருந்து சித்திரவதைக்கான ஆபத்து மிக்க இலங்கைக்கு வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்பப்படவில்லை என்பதை UK உறுதி செய்ய வேண்டும்.

---

Freedom from Torture (சித்திரவதையிலிருந்து விடுதலை) பற்றி: Freedom from Torture (சித்திரவதையிலிருந்து விடுதலை) என்பது சித்திரவதையிலிருந்து தப்பிப் பிழைத்தவர்களின் சிகிச்சைக்காகவும் மீள்குடியேற்றத்துக்காகவும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ள UK-ஐச் சேர்ந்த ஒரே ஒரு மனித உரிமைகள் நிறுவனம் ஆகும். இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலும் வசிக்கக்கூடிய, ஒவ்வொரு வருடமும் சித்திரவதையிலிருந்து தப்பிப் பிழைத்த சுமார் 1,000 பேருக்கு சேவைகளை வழங்குவதன் மூலம் நாங்கள் இதை மேற்கொள்கிறோம், உளவியல் மற்றும் உடல் சிகிச்சைகள், சித்திரவதைக்கான தடயவியல் ஆவணங்கள், சட்ட மற்றும் நலவாழ்வு ஆலோசனை மற்றும் ஆக்கப்பூர்வமான திட்டங்கள் ஆகியவை இதிலடங்கும்.

Survivors Speak OUT(SSO) என்பது சித்திரவதையிலிருந்து தப்பிப் பிழைத்தவர்களால் நடத்தப்படுகின்ற UK-இன் ஒரேயொரு வலையமைப்பு ஆகும், மேலும் இது சித்திரவதையைப் பற்றியும் அதன் தாக்கங்களைப் பற்றியும் பேசுவதில் முக்கியமாக ஈடுபட்டுள்ளது. சித்திரவதையிலிருந்து தப்பிப் பிழைத்தவர்களால், சித்திரவதையிலிருந்து தப்பிப் பிழைத்தவர்களுக்காக உருவாக்கப்பட்ட SSO, சித்திரவதையிலிருந்து தப்பிப் பிழைத்தவர்களின் உரிமைகளுக்காக அதிகாரிகளுடன் நேரடியாகப் பேசுகின்றது. இந்த வலையமைப்புக்கு Freedom from Torture (சித்திரவதையிலிருந்து விடுதலை)-ஆல் ஆதரவும் ஊக்கமும் வழங்கப்படுகின்றது, மேலும் இந்த வலையமைப்பின் அனைத்து உறுப்பினர்களும் முன்னாள் Freedom from Torture (சித்திரவதையிலிருந்து விடுதலை) வாடிக்கையாளர்கள் ஆவர்.

Freedom from Torture (சித்திரவதையிலிருந்து விடுதலை) மற்றும் Survivors Speak OUT(SSO) வலையமைப்பு பற்றி (ஆங்கிலத்தில்) மேலும் அறிந்துகொள்வதற்கு, தயவுசெய்து www.freedomfromtorture.org என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.

அல்லது ட்விட்டரில் எங்களை @FreefromTorture மற்றும் @SSOonline-இல் பின்தொடர்க.
அல்லது ஃபேஸ்புக்கில் எங்களுடன் இணைவதற்கு https://www.facebook.com/FreedomfromTorture